2026 ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 131/2025

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 (LW13) – மணிமேகலை |
| தகப்பனார் பெயர்: | ராஜூ |
| ஊர்: | சின்னமனூர் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் |
| வயது : | 61 |

25.06.2026

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூரில் குடியிருந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.05.2025 ம் தேதி அனுமந்தன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றியபோது சுமார் காலை 10.00 மணியளவில் நானும், எனது கிராம உதவியாளர் திருமதி.பிரியங்கா அனுமந்தன்பட்டியில் உள்ள எங்கள் அலுவலகத்தில் இருந்தோம். அங்கு உத்தமபாளையம் உட்கோட்ட காவல்துறை துணைக்காணிப்பாளர் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார்.

2. உத்தமபாளையம் காவல் நிலைய குற்ற எண்.150/2025 வழக்கில் ஆஜர் 1வது எதிரி பார்த்திபன் வள்ளியங்குளத்திற்கு, கிழக்கு கரையில் அருகில் உள்ள வனப்பேச்சியம்மன் கோவில் அருகில் இருப்பதாக இரகசிய தகவல் கிடைத்ததாக அவரை கைது செய்ய, எங்களை சாட்சியாக இருக்க வாய்மொழியாக கோரினார், நானும், எனது உதவியாளரும் சம்மதித்தன்பேரில், அனுமந்தன்பட்டியிலிருந்து சிலுவைகுருசை செல்லும் சாலைக்கு வரச்சொன்னார்கள். நானும், உதவியாளரும், காவல்துறை துணைக்காணிப்பாளரின் வாகனத்தில் காலை 10.55 மணிக்கு அங்கு சென்றோம். 1வது எதிரி பார்த்திபன் அங்கு இருந்தார். காவல்துறை துணைக்காணிப்பாளர் 1வது எதிரியை கைது செய்து, தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்துறை துணைக்காணிப்பாளர் பதிவு செய்தார்.

3. 1வது எதிரி பார்த்திபன் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் அனுமந்தன்பட்டியை சேர்ந்தவர் என்றும், அவர் இராணுவத்தில் பணிபுரிந்து வருவதாகவும், 1வது எதிரி பார்த்திபனுக்கும், சுந்தர் வகையறாவிற்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக அடிக்கடி பிரச்சனை வந்ததாகவும், அவர் வேலையிலிருந்தபோது, 1வது எதிரி பார்த்திபனின் தாயார் 3வது எதிரி விஜயா அவருக்கு அலைபேசியில் அழைத்து சுந்தர் வீட்டில் பிரச்சனை செய்வதாக கூறினார், அதற்கு நான் வந்து பார்த்துக்கொள்கிறேன் என்று 1வது எதிரி கூறியதாகவும், கடந்த 28.04.2025ம் தேதியன்று 1வது எதிரி ஊருக்கு வந்து, இடப்பிரச்சனை சம்பந்தமாக சுந்தர் வீட்டாருடன் பிரச்சனை செய்து வந்தார் என்றும், 01.05.2025ம் தேதி இரவு சுமார் 9.45 மணிக்கு சுந்தர் வீட்டின் வெளியே உள்ள தண்ணீர் தொட்டி தகரத்தை அடித்து பிரச்சனை செய்ததாகவும் கூறினார், அப்போது அவர்கள் யாரும் வரவில்லை என்பதால் வீட்டிற்கு சென்றுவிட்டதாக கூறினார்.

4. தர்மர் மகன் ராஜேந்திரன் 1வது எதிரி பார்த்திபனிடம் பிரச்சனையை காலையில் பேசிக்கொள்ளலாம் என்று கூறினார் என்றும், உடனே 1வது எதிரி பார்த்திபன் சுந்தர் வீட்டின் முன்பு வந்து ஆளை வைத்து மிரட்டுகிறீர்களா கேட்டார் என்றும், அப்போது அவர்களுக்குள் கைகலப்பு ஆகிவிட்டது என்றும் கூறினார். பார்த்திபன் வீட்டிற்குள் சென்று சவுக்கு மரக்கம்பை எடுத்துவந்து, 2வது எதிரி ராஜேந்திரன் ரீப்பர் கட்டை, 3வது எதிரி விஜயா அடிக்குழாயை எடுத்துவந்து, 1வது எதிரி பார்த்திபன் சுந்தரை அடித்தாகவும், 3வது எதிரி விஜயா முத்துமாயனை அடிகுழாயினால் அடித்ததாகவும், 2வது எதிரி ராஜேந்திரன் சுதாவை ரீப்பர் கட்டையால் அடித்ததாகவும், அரிவாளை கொண்டு வெட்டியதாகவும், பார்த்திபன் வீட்டிற்குள் சென்று பட்டாக்கத்தியை எடுத்துவந்து, சுந்தரை வெட்டியதாகவும், விஜயா முத்துமாயனை அடிகுழாயினால் தாக்கியதால் அவர் மயங்கி கீழே விழுந்துவிட்டதாகவும், பக்கத்தில் இருந்த கல்லை எடுத்து முத்துமாயன் தலையில் போட்டார் என்றும், 1வது எதிரி கூறினார்.

5. இருதரப்பினருக்கும் ஏற்பட்ட பிரச்சனைகளில் எதிரிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டன என்றும் 1வது எதிரி சொன்னார். எதிரிகள் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொன்னார் என்றும், எதிரிகள் மூன்று நபர்களையும் பின்னர் க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். முத்துமாயன் சம்பவ இடத்தில் இறந்துவிட்டார் என்றும் சுந்தர் என்பவர் க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்று 1வது எதிரி சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய பட்டாக்கத்தியை தனது வீட்டின் படுக்கையறையில் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்திருப்பதாகவும், 3வது எதிரி விஜயாவை சத்யா என்பவர் தோட்டத்தில் மறைத்து வைத்திருப்பதாக 1வது எதிரி சொன்னார்.

6. 1வது எதிரி தன்னை அழைத்துச்சென்றால் மறைத்து வைத்திருந்த பட்டாக்கத்தியை அடையாளம் காட்டுவதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல்துறை துணைக்காணிப்பாளர் பதிவு செய்தார், நானும் எனது உதவியாளரும் அதில் கையொப்பம் செய்தோம். சுமார் 12.00 மணியளவில் வனப்பேச்சியம்மன் கோவில் ஆலமரம் அருகில் இருந்த 1வது எதிரியின் TN 60 R 0486 பதிவெண் கொண்ட Yamaha Fazer இருசக்கர வாகனத்தை எதிரி அடையாளம் காட்ட காவல்துறை துணைக்காணிப்பாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார்.

7. சுமார் 12.30 மணியளவில் காவல்துறை துணைக்காணிப்பாளர், நான் மற்றும் உதவியாளர் ஆகியோர் அனுமந்தன்பட்டியிலிருந்து சிலுவைகுருசை செல்லும் சாலையில் உள்ள சத்யாவின் தோட்டத்திலுள்ள இடிந்த நிலையில் உள்ள வீட்டில் 3வது எதிரி விஜயாவை காவல்துறை துணைக்காணிப்பாளர் பெண் காவலர் உதவியுடன் கைது செய்து, 12.45 மணிக்கு 3வது எதிரி விஜயா தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நடந்த சம்பவம் குறித்து கூறினார். அதை காவல்துறை துணைக்காணிப்பாளர் பதிவு செய்தார்.

8. நானும், எனது உதவியாளரும் சாட்சிகளாக இருந்து அதில் கையொப்பம் செய்தோம். சுமார் 2.40 மணியளவில் நாங்கள் அனுமந்தன்பட்டியில் உள்ள வார்டு எண்.6, வடக்குத் தெருவில் உள்ள எதிரிகளின் வீட்டிற்கு சென்று, 1வது எதிரியின் படுக்கையறையில் கட்டிலின் மெத்தையின் கீழ் மறைத்து வைத்திருந்த பட்டாக்கத்தியை அடையாளம் காட்டி ஆஜர் செய்தார், அதை காவல்துறை துணைக்காணிப்பாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அத்தாட்சியில் நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.

9. பின்னர் சுமார் 3.00 மணியளவில் படுக்கையறையின் கிழக்குப் பக்கம் உள்ள வைக்கோல் வைத்துள்ள அறையில் வைக்கோலுக்குள்ளே மறைத்து வைத்திருந்த அடிகுழாயை 3வது எதிரி விஜயா எடுத்து அடையாளம் காட்டி

ஆஜர் செய்ததை காவல்துறை துணைக்காணிப்பாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியல் நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுக்கு தயார் செய்த அத்தாட்சியில் 1 வது எதிரி கையொப்பம் செய்தார், அதே போல் 3 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களுக்கு தயார் செய்த அத்தாட்சியில் 3 வது எதிரி கையொப்பம் செய்தார். மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தபோது, வழக்குச் சொத்துக்களை கைப்பற்றும்போது போலீசார் வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்தார்கள்.

10. நீதிமன்றம் கணினியில் அத்தாட்சியுடன் தாக்கல் செய்த பென்டிரைவை கணினியில் பார்த்து சாட்சியும் அதை பார்த்து, எதிரிகள் வழக்குச் சொத்துக்களை ஆஜர் செய்தபோது எடுத்த வீடியோ பதிவுகள் மற்றும் புகைப்படங்கள் என்பதை நிரூபணம் செய்தார். அந்த பென்டிரைவ் **சா.பொ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்த்திபன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11,** இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.12** ஆகவும், பட்டாக்கத்தி கைப்பற்றுதலுக்கான அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகவும், 3 வது எதிரி விஜயா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருந்த அடிகுழாயை அழைத்துச்சென்றால் காண்பிப்பதாக கூறினார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14,** அடிகுழாயை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சியில் நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்துள்ளோம்.

11. என்னிடம் காட்டப்படும் பட்டாக்கத்தி, அடிகுழாய் பைப் மற்றும் என்னிடம் காட்டப்படும் Yamaha Fazer இருசக்கர வாகனம் 1 மற்றும் 3 வது எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களாகும், அவை ஏற்கனவே சா.பொ.5, சா.பொ.4 மற்றும் சா.பொ.13 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. உத்தமபாளையம் காவல்துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.06.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.25 18:00:05 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.06.2026